# யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

## பருத்தித்துறை

"உன்னையே நீ அறிவாய்"

# வருடாந்த பரிசில் தின விழா - 2017

காலம் : 16.10.2017 (திங்கட்கிழமை)

நேரம் : மு.ப 9.00 மணி

இடம் : கல்லூரி மண்டபம்

**தலைவர் :**

திருமதி.தே.நவரத்தினம் (அதிபர்)

**பிரதம விருந்தினர் :**

திரு.ம.க.சிவாஜிலிங்கம்

(கௌரவ வடமாகாணசபை உறுப்பினர்)

**சிறப்பு விருந்தினர் :**

திருமதி. இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம்

(பழைய மாணவி)

**பரிசில் வழங்கல் :**

திருமதி.மலர்விழி சிவாஜிலிங்கம்

## மகுடவாசகம் (MOTTO)

"உன்னையே நீ அறிவாய்"

(Know thyself)

## கல்லூரியின் தூரநோக்கு (Vision )

"வடமராட்சிப் பிரதேசத்தில் சைவப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்து உயர்நிலைக் கல்லூரியாகத் திகழ்தல்"

(Bea high school protecting the values of Hindu tradition in the Vadamaradchy Zone)

## கல்லூரியின் பணிக்கூற்று (Mission)

"மாறி வரும் உலகின் சவால்களை எதிர்நோக்கக் கூடிய சிந்தனையாற்றலும் செயற்திறனும் ஆளுமையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்கும் ஆசிரியர்களின் ஆளுமையை வளர்ப்பதற்கும் சமுதாயத்துடன் இணைந்து பௌதீக வளங்களைப் பயன்படுத்தி வினைத்திறன் மிக்க செயற்பாட்டை உருவாக்கல்."

Using the physical resources available and Co-relating with the society achieve a talented performance by enabling the students, thoughts, actions and personality and teachers personality to meet the changing world's challenges.

# யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
# பரிசளிப்பு விழா அறிக்கை – 2017

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் 2016 ஆம் ஆண்டின் பரிசளிப்பு வைபவம் இன்று நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. இந்துப் பண்பாட்டுடன் கூடிய எமது பாடசாலையின் பரிசில் தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அன்பும் பண்பும் நிறைந்த பெருமதிப்பிற்குரிய முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய வடக்கு மாகாண சபை உறுப்பினருமாகிய கௌரவ கனகலிங்கம் சிவாஜிலிங்கம் அவர்களே! அவர் தம் பாரியார் திருமதி. மலர்விழி சிவாஜிலிங்கம் அவர்களே! சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவி திருமதி. இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் அவர்களே! வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களே! மற்றும் வலயப் பிரதிநிதிகளே! பழைய மாணவர் தாய்ச்சங்கத் தலைவர் அவர்களே! செயலாளர் அவர்களே! மற்றும் உறுப்பினர்களே! பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளர் அவர்களே! மற்றும் உறுப்பினர்களே! பாடசாலையின் பழைய மாணவர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! அயற்பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! எமது பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! மாணவர்களே! கல்விசாரா ஊழியர்களே! எல்லோருக்கும் இனிய காலை வணக்கத்தைக் கூறி வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

எமது பாடசாலை 2016ம் ஆண்டின் கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் வெற்றியீட்டிய மாணவர்களைக் கௌரவித்து இன்று விழா எடுக்கின்றது. எமது பாடசாலையானது 2016ல் அண்மையில் சிறந்த பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டமையால் 5 வருடங்களுள் பல நன்மைகளைப் பெறக்கூடிய வாய்ப்புள்ளது. இதனூடாக பாடசாலையின் பௌதீக, மனிதவள விருத்தியில் உயர்வு ஏற்படுவதுடன், பாடசாலையும் புதுப்பொழிவு பெற்று மிளிரும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் கௌரவ கனகலிங்கம் சிவாஜிலிங்கம் அவர்கள் ஒரு சாதனை வீரன். “அஞ்சுவது அஞ்சாமை பேதமை” என்ற செந்நாப்போதரின் வாக்கைப் புறந்தள்ளி ‘அஞ்சாமை’ என்பதே வாழ்வின் வேத வாக்கு என உலகிற்கு எடுத்துக் காட்டும் அஞ்சா நெஞ்சம் கொண்டவர். இன, மத, மொழி வேறுபாடு இன்றி எல்லோரையும் சமமாக மதிப்பவர். சமூகங்களை நல்வழிப்படுத்தி உயர்வடைய வைக்கும் வகையில் அல்லல்படுவோர்க்கு உதவிகளை அள்ளி வழங்கும் வல்லலுக்கு ஒப்பானவர். ஏழை எளியவர்களை இனங்கண்டு அவர்கள் துயர் துடைத்து வாழ வழிகாட்டி உதவிடும் ஏழைகளின் பங்காளர். பாடசாலைகளின் தேவைகளை அறிந்து பாரபட்சமின்றி உதவி வழங்கிடும் பார்போற்றும் உத்தமர்.

எமது பிரதம விருந்தினர் அவர்கள் வல்வெட்டித்துறையின் பிரசித்திபெற்ற அம்மன் கோவிலடி வீதியில் திரு.திருமதி கனகலிங்கம் தம்பதிகளுக்கு செல்வப்புதல்வனாக அவதரித்தார். “தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதின்றேல் தோன்றாமை நன்று” என்ற வள்ளுவரின் வைர வரிகளுக்கேற்ப புகழுடன் தோன்றினார். வல்வை சிதம்பராக் கல்லூரியில்

கல்வியைக் கற்று தொழில்நுட்ப உத்தியோகத்தராக அரச பணியில் கடமையாற்றினார். தமிழ் மாணவர் தரப்படுத்தல், அரச மொழிக்கொள்கையில் அநீதி, தொழில் வாய்ப்புக்களில் தமிழர்கள் புறக்கணிப்பு போன்ற அநீதிகளால் கொதித்தெழுந்து தனது அரச வேலையை தூக்கி வீசிவிட்டு வீரக் குணத்துடன் இணைந்து தமிழர்தம் விடிவிற்காக, உரிமைக்காக, உயர்வுக்காக உணர்புபூர்வமாகச் செயலாற்றினார். உண்மையான சமூகச் சேவகராக, மண் காக்கும் மைந்தனாக, வீரம் செறிந்த தலைமகனாக சோரம் போகாது வாழ்வு வாழ்ந்தார்.

சென்ற ஜனாதிபதி தேர்தலில் தனிச்சிங்கள நகரான குருநாகல் மாவட்ட செயலகம் சென்று எவ்வித அச்சமும் இன்றி நிமிர்ந்த நடையுடன் ஜனாதிபதி வேட்பாளர் விண்ணபத்தை கையளித்த பிரமுகராவார். இவரின் இச்செயலை வியந்து உலகே பாராட்டியது என்றால் .மிகையாகாது.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் எமது சமூகத்திற்கு பல அற்புத சேவைகளை ஆற்றியதோடு குறிப்பாகக் கல்விப்புலத்திற்கு பல அளப்பரிய சேவைகளை ஆற்றினார். பாராளுமன்றத்தில் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதிகளை எழுந்து நின்று தனித்து நின்று சுட்டிக்காட்டி தட்டிக்கேட்டதை பார் முழுதும் நன்கு அறியும்.

வீரம் செறிந்த வல்வெட்டித்துறையின் நகர பிதாவாக பதவியேற்று தன்னிகரற்ற சேவையாற்றி அந்நகரை நவீனமயமாக்கி புதுமெருகூட்டியுள்ளார்.

மாகாணசபை அங்கத்தவராக பதவியேற்ற காலத்திலிருந்து கல்விக்காகவும், மண்ணிற்காகவும், மக்களின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் பல்வேறு இடங்களில் குரல்கொடுத்து மக்களின் பாராட்டுக்குரியவராகியுள்ளார்.

தேடிவந்த அமைச்சுப் பதவியையே துச்சமென மதித்துப் புறந்தள்ளி இன்றும் எமக்காக பணியாற்றுகின்றார். பல்வேறு மக்களுக்கான செயற்றிட்டங்களை முன்னின்று நடாத்தி வெற்றியும் ஈட்டியுள்ளார். ஜெனீபாவில் மனித உரிமைப் பேரவையில் தமிழர்களுக்காக ஓங்கி ஒலித்த அவரது சிம்மக்குரலினை உலகமே வியப்புடன் பாராட்டி நின்றது. இதனால் மகிழாத தமிழர்களே இல்லை எனலாம். இன்று அக்குரலினை கேட்க எமது பாடசாலைச்சமூகம் பெரும் பேறு பெற்றுள்ளது. வல்வெட்டித்துறை வீர மைந்தரான எமது பிரதம விருந்தினர் தமிழர்தம் உரிமை காப்பதில் உணர்வோடும், உத்வேகத்தோடும் செயல்படுவது தமிழினத்தின் வரம் எனலாம்.

இலங்கையிலிருந்து பாய்மரக்கப்பலோட்டிய வல்வெட்டித்துறை மண்ணின் வீரப்புதல்வாரன அவர் எம் மக்களுக்காக வீரத்துடனும், விவேகத்துடனும் செயலாற்றுவது எமக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். பாடசாலைக்கல்வி அபிவிருத்தியில் அவர் காட்டும் அக்கறையும் தானாகவே முன்வந்து பாடசாலைகளுக்கு உதவும் மனப்பாங்கும் அவருக்கே உரித்தான தனித்துவமாகும்.

இவ்வாறெல்லாம் சாதனை படைத்த எம் சாதனை வீரனிடம் இன்றைய நாளாம் இந் நன்நாளில் எமது பாடசாலையின் நீண்டநாள் தேவையான வகுப்பறைகளுடன் கூடிய150 x 60 அடி கொண்ட சகல மாணவர்களும், பெற்றோர்களும் நிகழ்வுகளைக் கண்டுகழிக்கக்கூடிய பொதுநோக்கு மண்டபம் ஒன்றைக் கேட்பது தவறில்லை. எமது பாடசாலையானது 2019ம்

ஆண்டில் பவளவிழாவினைக் . காணவுள்ளது. இவ் விழாவினை இப்பாடசாலைச் சமூகத்தினர் சேர்ந்திருந்து சிறப்பாக நடாத்துவதற்கு இவ் வருடமே பொதுநோக்கு மண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டக்கூடிய முறையில் எமக்காகத் தாங்கள் முழு மூச்சுடன் செயற்பட்டுப் பலன்பெற்றுத் தர வேண்டும் என்று இத்தருணத்தில் வினயமாக வேண்டிக்கொள்கின்றேன். தாங்கள் செய்யும் இச் சேவையை எமது பாடசாலைச் சமூகம் உயிருள்ளவரை என்றென்றும் மறக்காது நன்றியுடன் செயல்படும் என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் சிறப்பு விருந்தினர் திருமதி.இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் அவர்கள் எமது கல்லூரியின் பழைய மாணவி ஆவார். பாடசாலைக் காலங்களில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்தவர். சிறந்த ஒழுக்கத்துடன் சீரிய கல்வியைக் கற்று மாணவ சமூகத்திற்காக தன் சேவையை ஆற்றியவர். தற்போது இலண்டன் மாநகரில் இருந்தபோதும் எமது நாட்டிற்காக அளப்பரிய சேவைகளை ஆற்றிவருபவர். உலகெங்கும் உள்ள மாணவ சமூகத்தினரின் உடல், உள, ஆரோக்கியத்திற்கான யோகா செயற்பாடுகளை சேவை மனப்பாங்கோடு ஆற்றி வருகின்றார். இவ்வாறெல்லாம் சேவையாற்றுகின்ற உள்ளத்தை வளர்த்தெடுத்த பெருமையுடன் எமது பாடசாலை இன்று பூரிப்போடு அவர்களை வரவேற்று நிற்கின்றது.

எமது பாடசாலை மாணவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள். சாதனை படைப்பதில் வல்லவர்கள். கல்வியுடன் சேர்ந்து இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னேற்றம் கண்டு வருபவர்கள். தமிழ்மொழிப் போட்டிகள், ஆங்கில தினப்போட்டிகள், புதிர்ப்போட்டிகள், பொதுப்போட்டிகள், மெய்வல்லுநர் போட்டிகள் போன்றவற்றில் பல சாதனைகளைப் படைத்து வருபவர்கள்.

அந்த வகையில் மாகாணமட்ட தமிழ்மொழித்தின நாடகப்போட்டியில் எமது மாணவர்கள் 3ம் இடத்தினையும், சமூக விஞ்ஞானப் போட்டியில் தரம் 12 ஐ சேர்ந்த அருளானந்தம் மதுஜா 3ம் இடத்தையும், பண்ணிசைப்போட்டியில் குழு II ஐ சேர்ந்த மாணவர்கள் 2ம் இடத்தினையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஒலிம்பியாட் போட்டியில் மாகாண மட்டத்தில் தெரிவாகிய செல்வி சிவனேசன் மதுஷாயினி தேசிய மட்டத்திலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

ஆங்கில தினப்போட்டியில் செல்வி செந்தில்ராஜா கம்சாயினி மாகாணமட்டத்தில் 2ம் இடத்தினை பெற்றுள்ளார்.

இவ்வருடம் பெருவிளையாட்டுக்களில் வலைப்பந்துப் போட்டியில் பிரிவு15 மாணவர்கள் மாகாணமட்டத்தில் 3ம் இடத்தினையும், உடற்பயிற்சிப் போட்டியில் பிரிவு 19 மாணவர்கள் மாகாணமட்டத்தில் 4ம் இடத்தினையும், பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மேலும் மெய்வல்லுனர் போட்டியில் மாகாணமட்டத்தில் தட்டெறிதல் நிகழ்ச்சியில் செல்வி.S.ஜெனோஷா 1ம் இடத்தையும், செல்வி.B.தீபராணி 3ம் இடத்தையும், செல்வி.R. மீருஷா 4ம் இடத்தையும் பெற்று தேசிய மட்டத்திலும் பங்குபற்றினர்.

எமது கல்விப்பெறுபேறுகளை நோக்கின் 2016 க.பொ.த சா/த பெறுபேறுகளின்படி செல்வி கம்சாயினி சிவசெந்திநாதன், செல்வி விதுர்சினி ஸ்ரீராமச்சந்திரன், செல்வி. மிதுனா

நடேசமுதலி, செல்வி. லக்சிகா நடராஜப்பெருமான், செல்வி. தேவாம்பிகை தேவபாலன் ஆகியோர் 9 பாடங்களிலும் A தர சித்தியை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். 2011ல் 58 வீதமாக இருந்த க.பொ.த சாதாரணதர பெறுபேறுகள் படிப்படியாக உயர்வடைந்து 2016ல் 84 வீதத்தை அடைந்தள்ளது.

2015ல் 64 வீதமாக இருந்த க.பொ.த உயர்தர பெறுபேறுற்று வீதமானது படிப்படியாக உயர்வடைந்து 2016ல் 68 வீதமாக உயர்ந்துள்ளது. க.பொ.த உயர்தர முன்னனிப் பெறுபேறுகளில் விஞ்ஞானப்பிரிவில் இவ்வருடம் செல்வி உமாசங்கர் சகானா 2A, B பெறுபேறு பெற்று வைத்தியத்துறைக்குத் தெரிவாகிப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். அதேபோன்று கணிதப்பிரிவில் செல்வி கார்த்திகேசு கீர்த்தனா, செல்வி. பிரபாகரன் சர்மிளா ஆகியோர் 2A, B தரச்சித்தி பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அதேபோன்று வர்த்தகத்துறையில் செல்வி.ஜெயவீரசிங்கம் சரணியா, செல்வி.அலோசியஸ் நிரஞ்சிதா ஆகிய மாணவிகள் முறையே 3A, 2A B தரச் சித்திகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். கலைப்பிரிவில் செல்வி.முருகுப்பிள்ளை நிந்துஜா, செல்வி தவராசா தர்சினி ஆகியோர் முறையே 3A, 2A,B தரச் சித்திகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இவ்வருட பல்கலைக்கழக அனுமதிக்காக அனைத்துத் துறைகளிலுமிருந்து 24 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். ஒவ்வொரு வருடமும் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், முகாமைத்துவம், சட்டம் போன்ற துறைகளில் பல மாணவர்கள் தெரிவாகி எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்துக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. எமது கல்லூரியானது எதிர்காலச் சமூகம் வேண்டி நிற்கும் ஒழுக்கசீலமுள்ள மாணவர்களையும், கல்விமான்களையும் உருவாக்கும் தலையாய பணியை மேற்கொண்டு வருகிறது. இதற்காக இரவு பகல் என்று பாராது அயராது பாடுபடும் எமது பாடசாலை ஆசிரியர்களுக்கு பாடசாலைச் சமூகம் சார்பில் இந்நேரத்தில் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் மூலம் பாடசாலையின் பௌதீகவள வளர்ச்சியும், மாணவர் கல்வி அபிவிருத்தியும், மனிதவள விருத்தியும் பல்வேறு மட்டங்களிலிருந்தும் வளர்ச்சி கண்டு வருகிறது. கல்வி அமைச்சும் எமது பாடசாலையின் பௌதீகவளத்தேவைகளையும், மனிதவளத் தேவைகளையும் கேட்டறிந்து பூர்த்தி செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் அனைவரும் தம்மால் இயன்ற பாடசாலையின் முக்கிய தேவைகளை நிவர்த்தி செய்து வருகின்றார்கள். பாடசாலை நிகழ்வுகளை நடாத்துவதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுகின்றது. எமது பாடசாலையானது சகல துறைகளிலும் தேசிய ரீதியில் முன்னணிப்பாடசாலையாகத் திகழ்வதற்கு எமது பாடசாலைச் சமூகத்தினர் அனைவரும் தோளோடு தோள்கொடுத்து உதவுவதன் ஊடாக மென்மேலும் பல சாதனைகளைப் புரிய முடியும் என இந்நேரத்தில் உறுதி கூறி எனது அதிபர் உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

## கல்லூரியின் ஆளணி விபரம் - 2017

| | |
|---|---|
| தரம் 06 - 09 இடைநிலை | 387 |
| தரம் 10 - 11 இடைநிலை | 216 |
| தரம் 12 - 13 சிரேஸ்ட பிரிவு | 371 |
| மொத்தம் | 974 |

## ஆசிரிய ஆளணி விபரம் - 2017

| | |
|---|---|
| அதிபர் | - 01 |
| உபஅதிபர் | - 01 |
| பதில் அதிபர்கள் | - 03 |
| விஞ்ஞானப்பட்டதாரி | - 11 |
| கலைப்பட்டதாரி | - 24 |
| வணிகப்பட்டதாரி | - 07 |
| பயிற்றப்பட்டவர்கள் | - 20 |
| மொத்தம் | - 67 |

## கல்விசாரா ஆளணி - 2017

| | |
|---|---|
| பகல் காவலாளி | 01 |

## பற்றாக்குறையான ஆளணி - 2017

| | |
|---|---|
| இரவுக் காவலாளி | 01 |
| அலுவலக உதவியாளர் | 01 |
| ஆய்வுகூட உதவியாளர் | 01 |
| தோட்டத் தொழிலாளி | 01 |

## பற்றாக்குறையான ஆசிரியர்- 2017

| | |
|---|---|
| நடன ஆசிரியர் | 01 |
| ஆங்கில ஆசிரியர் | 01 |

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர் விபரம் - 2016

1. திருமதி. அருள்மொழி மகேஸ்வரன்

## புதிதாக இணைந்தோர் விபரம் -2016

1. திருமதி. சுஜாதா ராதாகிருஷ்ணன்
2. திருமதி.விஸ்வேதிகா நிகாசன்
3. திருமதி. தேனுகாந்தி ரூபதாஸ்
4. செல்வி. சுதாஜினி நாகரத்தினம்
5. செல்வி. விஜிதா மாணிக்கராஜா

## பழைய மாணவர் சங்க நிதி உதவி பெறுவோர் - 2016

நூலக உதவியாளர் - திருமதி சி.லோகேஸ்

விளையாட்டு உதவியாளர் - செல்வி சி.சிந்துஜா

கணனி உதவியாளர் - செல்வி ச. சுகிர்தா

## பரீட்சைப் பெறுபேறுகள்

## க.பொ.த (சாதாரண தரம்) – 2016

விண்ணப்பித்தோர் 105

தோற்றியோர் 105

க.பொ. த உயர்தரத்திற்கு தகுதி பெற்றோர் 88

### க.பொ.த (சா.த) முன்னணிப் பெறுபேறுகள் -2016 December

| இல | பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| 1 | கம்சாயினி சிவசெந்திநாதன் | 9A |
| 2 | விதுர்சினி ஸ்ரீராமச்சந்திரன் | 9A |
| 3 | மிதுனா நடேசமுதலி | 9A |
| 4 | லக்சிகா நடராஜப்பெருமான் | 9A |
| 5 | தேவாம்பிகை தேவபாலன் | 9A |
| 6 | சர்மினி கிருஷ்ணகுமார் | 8A, B |
| 7 | ஜதிஷ்வரியா வேணுகோபாலவாணிதாசன் (EM) | 8A, B |
| 8 | சிந்துஜா பாலேந்திரன் (EM) | 7A, 2B |

| | | |
|---|---|---|
| 9 | சங்கவி இரவீந்திரன் (EM) | 7A, 2B |
| 10 | யதுகிரி பாலசுப்பிரமணியம் | 7A, 2B |
| 11 | கஸ்தூரி சந்திரன் | 6A, 2B,C |
| 12 | டனுசியா சந்திரகுமார் | 6A, 2B,C |
| 13 | றக்சாயினி குமாரசீலன் | 6A, B, 2C |
| 14 | கீர்த்திகா சுந்தரராஜன் | 6A, B, C, S |
| 15 | தர்மிகா அண்ணாத்துரை | 6A, 3C |
| 16 | வினித்தா கெங்காதரன் | 5A, 4B |
| 17 | கௌசிகா ஞானசேகரம் | 5A, 3B, C |
| 18 | மயூரி மார்க்கண்டு | 5A, 2B, 2C |
| 19 | நிரோசிகா தவராஜா | 5A, 2B, C, S |
| 20 | ஜெயமிதுலா வாமதேவன் | 5A, 4C |

## க.பொ.த சாதாரண தர பெறுபேற்றுப்பகுப்பாய்வு - 2016

| தொ.இல | பாடம் | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | சித்தி | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | சைவநெறி | 99 | 99 | 99 | 100% |
| 2 | கத்தோலிக்கம் | 06 | 06 | 06 | 100% |
| 3 | தமிழ் | 105 | 105 | 99 | 94% |
| 4 | ஆங்கிலம் | 105 | 105 | 53 | 50% |
| 5 | கணிதம் | 105 | 105 | 89 | 85% |
| 6 | வரலாறு | 105 | 105 | 94 | 90% |
| 7 | விஞ்ஞானம் | 105 | 105 | 82 | 78% |
| தொகுதி I | | | | | |
| 8 | வர்த்தகம் | 67 | 67 | 58 | 87% |
| 9 | புவியியல் | 14 | 14 | 14 | 100% |
| 10 | குடியியல் | 24 | 24 | 18 | 75% |
| தொகுதி II | | | | | |
| 11 | சங்கீதம் | 32 | 31 | 31 | 100% |
| 12 | சித்திரம் | 04 | 04 | 04 | 100% |
| 13 | நடனம் | 07 | 07 | 07 | 100% |
| 14 | தமிழ் இலக்கியம் | 58 | 58 | 57 | 98% |
| 15 | நாடகம் அரங்கியலும் | 01 | 01 | 01 | 100% |
| 16 | ஆங்கில இலக்கியம் | 04 | 04 | 04 | 100% |
| தொகுதி III | | | | | |
| 17 | தகவல் தொழில்நுட்பம் | 33 | 33 | 27 | 82% |
| 18 | மனையியல் | 27 | 27 | 23 | 85% |
| 19 | சுகாதாரமும் உடற்கல்வியும் | 45 | 45 | 43 | 96% |

# க.பொ.த (உயர்தரம்) முன்னணிப் பெறுபேறுகள் – 2016

விண்ணப்பித்தோர்: 93

தோற்றியோர்: 91

பல்கலைக்கழக தகுதி பெற்றோர்: 62

## Maths Stream

| S.No | Name | Results | Z score | Course |
|---|---|---|---|---|
| 1 | Sritharan Keerthana | A 2C | 1.0439 | Phy.Sc |
| 2 | Manimaran Kanista | B C S | .7564 | ICT |
| 3 | Senthilrasa Sharmini | C S S | .0198 M | ICT |
| 4 | Karthikesu Keerthana (2nd shy) | 2A B | 1.7341 | QS |
| 5 | Pirabakaran Sharmila (2nd Shy) | 2A B | 1.7498 | QS |
| 6 | Sivakumar Kokila (2nd shy) | 2B C | 1.2239 | Computer Sc.Tec |

## Bio Stream

| S.No | Name | Results | Z score | Course |
|---|---|---|---|---|
| 1 | Umashangar Sahana | 2A B | 2.0398 | Medicine |
| 2 | Balachandran Narmatha | B 2C | 1.0364 | Agri |
| 3 | Murali Vennila (2nd shy) | A 2B | 1.8531 | Vet |
| 4 | Kulanayagam Rajilatha (2nd shy) | 2B C | 1.2125 | Computer Sc.Tec |
| 5 | Karunakaran Rubini (2nd shy) | ABC | 1.7156 | IT |

## Commerce Stream

| S.No | Name | Results | Z score | Course |
|---|---|---|---|---|
| 1 | Jeyaveerasingam Saranya | 3A | 1.5150 | Management |
| 2 | Alosiyas Niranjitha | 2AB | 1.2590 | Management |

# Arts Stream

| S.No | Name | Results | Z score | Course |
|---|---|---|---|---|
| 1 | Thavarasa Tharsiny | 2A B | 1.6517 | Arts |
| 2 | Raveendran Rasitha | A2 B | 1.3427 | Arts |
| 3 | Thavakkumar Thuvaraka | A B C | 1.3264 | Arts |
| 4 | Kuventhirarajah Kayaththiri | A B C | 1.2749 | Arts |
| 5 | Thavarasha Thayaliny | 2A C | 1.1782 | Arts |
| 6 | Santhiralingam Mithuna | A2B | 1.1646 | Arts |
| 7 | Nagarasa Mohana | A B C | 1.0530 | Arts |
| 8 | Kalaichelvan Kalaivani | 3B | 1.0484 | Arts |
| 9 | Saththiyanathan Salini | A B C | .8164 | Dance |
| 10 | Ramachandran Rekala | B 2C | .5300 | Dance |
| 11 | Muruguppillai Ninthuja (2nd Shy) | 3A | 1.6432 | Arts |

## க.பொ.த (உ/த) பெறுபேற்றுப் பகுப்பாய்வு - 2016

| S.No | Subject | Applied | Sat | Pass | Percentage of pass |
|---|---|---|---|---|---|
| 01 | Physics | 27 | 27 | 18 | 67% |
| 02 | Chemistry | 27 | 27 | 19 | 70% |
| 03 | Biology | 15 | 15 | 14 | 93% |
| 04 | Combined Maths | 12 | 12 | 10 | 83% |
| 05 | Economics | 16 | 16 | 16 | 100% |
| 06 | Geography | 17 | 16 | 16 | 100% |
| 07 | Political science | 19 | 19 | 13 | 68% |
| 08 | Logic | 09 | 09 | 03 | 33% |
| 09 | Home Economics | 05 | 05 | 05 | 100% |
| 10 | Business studies | 11 | 11 | 11 | 100% |
| 11 | Accounting | 11 | 11 | 10 | 91% |
| 12 | Chritianity | 08 | 08 | 08 | 100% |
| 13 | Hindu civilization | 21 | 21 | 20 | 95% |
| 14 | Dancing | 03 | 02 | 02 | 100% |
| 15 | Music | 02 | 02 | 02 | 100% |
| 16 | Tamil | 49 | 47 | 42 | 89% |
| 17 | History | 17 | 16 | 16 | 100% |
| 18 | Art | 01 | 01 | 01 | 100% |
| 19 | General English | 93 | 91 | 13 | 14% |

# UNIVERSITY ENTRANCE - 2016/2017

## Maths Stream

1) Sritharan Keerthana
2) Manimaran Kanista
3) Senthilrasa Sharmini
4) Karthikesu Keerthana (2nd shy)
5) Pirabakaran Sharmila (2nd Shy)
6) Sivakumar Kokila (2nd shy)

## Bio Stream

1) Umashangar Sahana
2) Balachandran Narmatha
3) Murali Vennila (2nd shy)
4) Kulanayagam Rajilatha (2nd shy)
5) Karunakaran Rubini (2nd shy)

## Commerce Stream

1) Jeyaveerasingam Saranya
2) Alosiyas Niranjitha

## Arts Stream

1) Thavarasa Tharsiny
2) Raveendran Rasitha
3) Thavakkumar Thuvaraka
4) Kuventhirarajah Kayaththiri
5) Thavarasha Thayaliny
6) Santhiralingam Mithuna
7) Nagarasa Mohana
8) Kalaichelvan Kalaivani
9) Saththiyanathan Salini
10) Ramachandran Rekala
11) Muruguppillai Ninthuja (2nd Shy)

# எமது கல்லூரியில் இயங்கும் மன்றங்கள்

## இந்து மன்றம்

சைவப்பண்புகளை மாணவரிடையே வளர்க்கும் நோக்கில் இம்மன்றச் செயற்பாடுகள் அமைகின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பஞ்சபுராணம், சிவபுராணம் என்பன ஓதப்படுவதுடன், தினமும் காயத்திரி மந்திரமும் ஓதப்படுகின்றது. மேலும் வருடந்தோறும் தைப்பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி போன்ற நிகழ்வுகள் கொண்டாடப்படுவதுடன் குருபூசைத் தினங்களும் கொண்டாடப்படுகின்றன. இத்தகைய விழாக்களால் மாணவர்கள் தம் வாழ்வில் தலைமைத்துவத்தையும் சமய பழக்க வழக்கங்களையும் கைக்கொள்ள வழிகாட்டுகின்றது.

## கிறிஸ்தவ மன்றம்

சைவப்பாரம்பரியங்களைக் கொண்ட இந்துப் பாடசாலையில் கிறிஸ்தவ, கத்தோலிக்க மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இம் மாணவர்கள் கிறிஸ்தவ மன்றத்தினூடாக தமது ஆற்றல்களை வளர்த்துக்கொள்கின்றனர். அத்தோடு வருடாவருடம் நடைபெறும் ஒளிவிழா நிகழ்வானது மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு அதிபரும் ஆசிரியர்களும் ஒத்துழைத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆங்கில மன்றம்

மாணவர்கள் ஆங்கிலத்தில் சுயமாக பேசுவதற்கு இம் மன்றம் வழிகாட்டுகின்றது. நாட்டின் எப்பகுதியிலும் சென்று ஆங்கிலத்தில் உரையாடி தமது தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்வதற்கு இம் மன்றம் உதவி புரிகின்றது. சில மாணவர்களிடையே மறைந்து இருக்கும் திறன்களை வெளிக்காட்டுவதற்கு இம் மன்றம் உதவுகின்றது. மேடைக்கூச்சம், பலர்முன் பேசும் கூச்சம் போன்றவற்றை இல்லாதொழிக்க இம்மன்றம் உதவுகின்றது. இதன் மூலம் ஆங்கில தினப்போட்டிகளில் பெரும்பாலான மாணவர்கள் வெற்றியீட்ட முடிகின்றது.

## மனைப்பொருளியல் மன்றம்

இம் மன்றத்தின் மூலம் வகுப்பு 10 தொடக்கம் வகுப்பு 13 வரை இப்பாடத்தினைத் தெரிவு செய்து கற்கும் மாணவிகள் தமது போசாக்குணவுகள், நோயற்ற வாழ்வு, இல்லஅலங்கரிப்பு முறை, நவீன மலர், கைவினைப்பொருட்கள் செய்யும் முறைகளை செய்மறை மூலமாகக் கற்பதுடன் கல்வியியல் கல்லூரிக்கு இலகுவாக தெரிவு செய்வதற்கான இவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒரு பாடமாகவும் செயற்படுவது பற்றியும் விளக்கப்பட்டு வருகிறது.

வணிக மன்றம்

மாணவர்களை நவீன தொழில்நுட்ப உலகில் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற வகையில் தயார்படுத்தி இன்றைய சவால் மிக்க உலகில் சவால்களை எதிர் கொண்டு கல்வியில் வெற்றிப் பாதையில் செல்வதற்கு தயார்படுத்துவதுடன் வணிக தினப் போட்டிகளில் மாணவர்களை தயார்படுத்தி பங்குபற்ற செய்து வெற்றியடையச் செய்தல்.

தமிழ் மன்றம்

எமது கல்லூரியில் தமிழ் மன்றமானது தவணையில் இரு முறை கூடுகின்றது. இம் மன்றத்தில் பேச்சு,வாசிப்பு நாடகம் கவிதை ,உரையாடல், புதிர் வினாக்கள் போன்றவை மூலமாக தமது தேவைகளை வளர்த்துக்கொள்ள வாய்ப்பேற்படுகின்றது. தமிழ்தினப்போட்டிகளுக்கும் ஏனைய போட்டிகளுக்கும் மாணவர்களைத் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்புகளையும் இம் மன்றம் அளித்துள்ளது.

சமூக விஞ்ஞான மன்றம்

வரலாறு, புவியியல், குடியுரிமைக்கல்வி போன்ற பாடங்களின் ஊடாக மாணவர்களின் அறிவு திறன் ஆற்றல்களை மேம்படுத்தும் வகையில் சமூகவியல் மன்றம் முன்னெடுத்து வரப்படுகின்றது. மேலும் சமூகவிஞ்ஞானப் போட்டியில் மாணவர்கள் வலய, மாகாண, தேசிய மட்டத்தில் பங்குபற்றி பாடசாலைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் எமது மன்றத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளமை ஒரு சிறப்பான அம்சமாகக் காணப்படுகிறது.

க்ணித விஞ்ஞான மன்றம்

கணித மன்றத்தில் தரம் 6 - 11 வரையான மாணவர்கள் பயன் பெறும் வகையில் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. மாறிவரும் உலகிற்கேற்ற வகையில் அறிவு, திறன் மனப்பாங்குகளைக் கொண்ட செயல்திறன் மிக்க மாணவர்களை இம் மன்றத்தின் மூலம் வளர்த்தெடுப்பதோடு கணிதவியலாளர்களின் வரலாறு, கணித நாடகம், கணிதப்புதிர் சம்பந்தமான வினாவிடைப்போட்டி, கணித உபகரணங்களின் பயன்பாடு போன்ற விடயங்கள் என்பவற்றின் மூலம் மாணவர்களுக்கு கணிதம் சம்மந்தமான அறிவு வளர்க்கப்பட்டது. அத்துடன் தரம் 6 மாணவர்களுக்கு பிரிவு ரீதியாக பாடவேளை நேரங்களில் கணித மாணவர் மன்றம் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. விஞ்ஞானப் புதிர்போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்கும் இம் மன்றம் துணைபுரிகிறது.

## சுகாதார மன்றம்

உடல் உள சமூக, ஆன்மீக செயற்பாடுகள் மூலம் மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி கற்றல் செயற்பாடுகள், தனிநபர் சுகாதாரம், சுற்றாடல் சுத்தம் போன்றவற்றை மேம்படுத்தும் நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இம்மன்றம் இயங்குகின்றது.

இம் மன்றத்தின் ஒழுங்கமைப்பில் தனிநபர் விளையாட்டுக்கள், குழு விளையாட்டுக்கள் (வலைப்பந்து, கரப்பந்து, கபடி, மேசைப்பந்தாட்டம், சதுரங்கம், உடற் பயிற்சி) போன்றவற்றில் கோட்டம், வலயம், மாகாணம், தேசியம் என்ற நிலைகளில் எமது மாணவர்களின் சாதனைகள் உயர்ந்து செல்கின்றது.

## அழகியல் மன்றம்

அழகியலின் அடிப்படை அம்சங்களாக அறிமுறை, செய்முறை, ஆக்கத்திறன், நயத்தல், கலாச்சாரப்பின்னணி, பண்பாடு ஒழுக்கம் என்பன காணப்படுகின்றன. எமது பாடசாலை மாணவர்களுக்கு இவை பேணப்பட்டு வருடந்தோறும் தைப்பெங்கல் விழா, சித்திரைப்புத்தாண்டு விழா, நவராத்திரி, பரிசளிப்பு விழா, பெர்ணமி விழா, தமிழ்தினப்போட்டிகள் என்பவற்றுக்கு நிகழ்ச்சிகள் வழுங்கப்பட்டு மாணவர்களிடையே அழகியல் இரசனையை உருவாக்கி வருகின்றது. எமது பாடசாலை அழகியல் மன்றச் செயற்பாட்டினால் எமது பண்பாடு கலாசாரம் என்பன நலிவடைந்து செல்லாமல் வளர்த்துச் செல்லப்படுகின்றது என்பது கண்கூடு.

## நூலக மன்றம்

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு உதவும் வகையில் சிறந்த நூல்களை உள்வாங்கி இம் மன்றம் இயங்கி வருகின்றது. காலந்தோறும் பலரின் ஒத்துழைப்பினாலும், பல்வேறு அமைப்புக்களின் அன்பளிப்பினாலும் புதிய நூல்கள் கிடைக்கின்றன. நூலக வாசிப்பு மாத செயற்பாடுகள், நூலகக் கண்காட்சிகள் என்பன எமது நூலக மன்றத்தினால் சிறப்பாக நடைபெறுகின்றன. இவ்வாறான பல்வேறு செயற்பாடுகளினால் எம் கல்லூரி மாணவர்கள் பெரிதும் பயனடைகின்றனர்.

## உயர்தர மாணவர் மன்றம்

எமது கல்லூரியின் உயர் தர வகுப்பு மாணவர்களை அங்கத்தவராகக் கொண்டு பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டலில் உயர்தர மாணவர் மன்றம் சிறப்பாக இயங்குகின்றது. மாணவர்களின் திறமையை வெளிக்கொணரும் வகையில் இந்து விழிகள் சஞ்சிகை வருடந்தோறும் உயர்தர மாணவர்களது ஒன்றுகூடல் நிகழ்வில் வெளியிடப்பட்டது. இச் சஞ்சிகை வெளியீடானது கணித விஞ்ஞான, கலைப்பிரிவு மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் அமைகின்றது ஓர் சிறப்பம்சமாகும்.

# பாடசாலையில் இயங்கும் அமைப்புக்கள்

## பழைய மாணவர் சங்கம்

எமது பாடசாலையின் பழைய மாணவர் தாய்ச்சங்கம் பருத்தித்துறையுடன் சேர்ந்து கொழும்பு, கனடா, இலண்டன், அவுஸ்திரேலியா ஆகிய கிளைச்சங்கத்தினரும் இணைந்து பாடசாலைக்குத் தேவைப்படும் உதவிகளை அதிபர் ஊடாக உடனுக்குடன் அறிந்து நிறைவேற்றி வருகின்றனர். அவர்களுடைய சேவையினால் பாடசாலையின் பௌதீகவளத் தேவைகள், மாணவரின் கல்வி அபிவிருத்தித்தேவைகள், இணைபாடவிதானத் தேவைகள் என்பன உடனுக்குடன் நிறைவேற்றப்படுகின்றது. அந்த வகையில் பொருளாதாரத்தில் பின்னடைவான மாணவர்கள் 35 பேர் இனங்காணப்பட்டு கனடா வாழ் பழைய மாணவாகளால் மாதாந்தம் தலா 2000 ரூபா வீதம் வழங்கப்படுகிறது.

அதே போன்று இலண்டன் பழைய மாணவர் சங்க உதவியுடன் பருத்தித்துறை பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக உயர்பெறுபேற்று சாதனைகளை பெறும் க.பொ.த சாதாரணதர, க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதியாக ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா 5000 ரூபா வீதம் வருடாவருடம் வழங்கப்படுகிறது. அத்துடன் விஞ்ஞான, கணிதத் துறையில் வசதி குறைந்த மாணவர்கள் இனங்காணப்பட்டு ரூபா1500 க்கு குறையாத மாதாந்த கற்றல் நிதி வழங்கப்படுகின்றது. தேசியமட்ட விளையாட்டு போட்டிக்கான போக்குவரத்து செலவுகளையும் இலண்டன் பழைய மாணவர் சங்கத்தினர் வழங்குகின்றனர். அத்துடன் பாடசாலையில் இனங்காணப்பட்ட பௌதீகவளத் தேவைகளான கணணிவசதி, தளபாட வசதிகள் அவர்களால் பூர்த்தி செய்யப்படுகின்றது. பாடசாலையின் உயர்தர கணித, விஞ்ஞானப்பிரிவினருக்கான விசேட செயற்றிட்டங்களை நடாத்துவதற்கு நிதி உதவிகளை வழங்குகின்றார்கள். இலண்டனிலிருந்து வைரவநாதன் சரஸ்வதி அவர்களால் விஞ்ஞானப்பிரிவு மாணவி ஒருவருக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கப்படுகிறது.

அத்துடன் நெல்லியடி சனசமூக நிலைய கனடாவாழ் நலன்விரும்பிகளால் க.பொ.த உயர்தர அனைத்து துறைகளிலும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள 07 மாணவர்களுக்கு ரூபா 1500 வீதம் மாதாந்தம் கற்றல் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மேலும் வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது க.பொ.த உயர்தரத்தில் சிறந்த பாடப்பெறுபேற்று மாணவர்களுக்கான ஊக்குவிப்பு பரிசுக்குரிய நிதியை திரு.கணேசலிங்கம் நரேந்திரன் நிதியிலிருந்து பெறுகிறோம். தரம் 6 – 11 வரையான பாடரீதியான சிறப்பு மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி. மகேஸ்வரி இராசரத்தினம் நிதியத்தில் இருந்து வழங்குகிறோம்.

க.பொ.த உயர்தரத்தில் பல்கலைக்கழகம் செல்லும் கலைப்பிரிவில் விசேட தேவைக்குரிய முதனிலை மாணவிக்கான பணப்பரிசிலினை திருமதி.சரஸ்வதி தியாகராஜன் நிதியத்திலிருந்து வழங்குகிறோம்.

க.பொ.த உயர்தரப்பிரிவில் மருத்துவ மாணவி இல்லாவிடத்து பொறியியல் மாணவிக்கும் பொறியியல் மாணவி இல்லாதவிடத்து முகாமைத்துவ முதல்தர மாணவிக்கான பணப்பரிசினை இந்திராணி பாஸ்கரன் நிதியத்திலிருந்து வழங்குகிறோம்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை மேலும் ஊக்குவிக்கும் முகமாக தமிழ்தினப்போட்டியில் மாகாண மட்டத்தில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவிகளுக்கான பணப்பரிசில்களை திருமதி. புஸ்பம் சிவகுருநாதன் நினைவாக அவர் மகள் டாக்டர் நந்தினி நந்தகுமார் அவர்கள் வழங்குகிறார்.

தமிழ்தினப்போட்டியில் வலய மட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவிகளுக்கான பணப்பரிசில்களை சரஸ்வதி வைரவநாதன் நினைவாக சிதர்சினி சாந்தகுமார் அவர்களால் வழங்கப்படுகின்றது.

செல்வி.மகேஸ்வரி வேலாயுதம் நினைவாக தரம் 06 வகுப்பிற்கு வேறு பாடசாலைகளில் இருந்து வரும் புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவிகட்கான பணப்பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

கனடாவாழ் பழைய மாணவி திருமதி.தங்கமணி முத்துக்கிருஷ்ணன் அவர்களால் வர்த்தகப்பிரிவில் 03 மாணவிகளுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்படுகிறது.

பழைய மாணவர் தாய்ச்சங்கத்தினால் மாகாண, தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டி, தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிகள் என்பவற்றிற்கான செலவு நிதி வழங்கப்படுகிறது. அமரத்துவம் அடைந்த எமது கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியரும், பழைய மாணவியுமான திருமதி. ஜெயபூபதி குலசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகளால் ஆங்கிலதினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும், ஆங்கில தினப்போட்டிக்கான செலவுகளும் வழங்கப்படுகிறது.

கொழும்பு பழைய மாணவர் சங்கக்கிளையினூடாக பாடசாலையில் தொண்டர்களாகச் செயற்படும் நூலக செயற்பாட்டாளர், கணனி உதவியாளர், விளையாட்டுப் பயிற்றுநர் ஆகியோர்க்கான மாதாந்த ஊதியம் வழங்கப்படுகிறது. அத்துடன் பாடசாலை வருடாந்த பரிசில் தினவிழா சிறப்புற நடைபெற ஞாபகார்த்தப் பரிசில்களையும், விசேட ஊக்குவிப்புப் பரிசில்களையும் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர் வருடாவருடம் வழங்கி வருகின்றனர். இவற்றுக்கு மேலாக பாடசாலையின் தேவைகளை உடனுக்குடன் கேட்டறிந்து நிறைவு செய்வதில் பெருவிருப்போடு பழைய மாணவர்கள் செயற்படுவது எல்லோரினதும் பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

மாணவர்களுக்கான விளையாட்டுச் சீருடைகள், கணணிகள் என்பவற்றை கனடா, அவுஸ்திரேலியா ஊடாக கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர் பெற்று வழங்க முன்வந்துள்ளனர். அவுஸ்திரேலியாவில் இருந்து திருமதி. காஞ்சனா கிருஷ்ணசிங்கம் அவர்கள் ஆசிரியர்தின விழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்கியதுடன் பாடசாலைக்கான நவீன செவிப்புல சாதனங்களையும் வழங்க முன்வந்துள்ளார்.

மேலும் எமது பாடசாலையின் பௌதீகவளத் தேவைகள் முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்பட்டு அவற்றை பெற்றுத்தருவதிலும், நிறைவு செய்வதிலும் பழைய மாணவர்கள் பேருதவி புரிகின்றனர். பாடசாலையின் கட்டுமாணப்பணிக்காக காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதில் கொழும்பு பழைய மாணவர் சங்கம் பெருமுயற்சி எடுத்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

இவ்வாறாக பழைய மாணவர் தாய்ச்சங்கமும் கொழும்பு, இலண்டன், கனடா, அவுஸ்திரேலியா கிளைச்சங்கங்களும் சேர்ந்து எமது பாடசாலைக்கு வேண்டிய உதவிகளை செய்து வடமராட்சி பிரதேசத்தில் முன்னனிப் பாடசாலைகளில் ஒன்றாக இப்பாடசாலை திகழ அரும்பாடுபட்டு உழைக்கின்றனர்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலையின் முதுகெலும்பாகத் திகழ்வது பாடசாலை அபிவிருத்திச்சங்கமாகும். அந்த வகையில் பாடசாலையின் தேவைகளையும், பாடசாலையின் முன்னேற்றங்களையும் நன்கு அவதானித்து தம்மாலான உதவிகளையும் ஒத்தாசைகளையும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் வழங்கி வருகிறது.

பாடசாலையில் மாதாந்தம் கூட்டப்படும் செயற்குழுக் கூட்டங்களில் பங்குபற்றி கல்வி அடைவுமட்ட உயர்வுக்கான ஆலோசனைகளை வழங்குவதுடன் பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளிலும் கலந்து கொள்கின்றனர். பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளுக்கு அதிபருக்கு உதவியாக நின்று செயற்படுகின்றனர்.

விளையாட்டுப்போட்டி, பரிசில் தினவிழா, ஆசிரியர்தின விழா போன்ற பாடசாலையின் முக்கிய நிகழ்வுகள் சிறப்புற நிறைவேற தம்மாலான உதவி ஒத்தாசைகளை வழங்குகின்றனர். பாடசாலை சுற்றுப்புறச் சுத்தத்தை பேணும் வகையில் தவணைக்கு ஒரு முறையாவது சிரமதானப்பணியை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இவ்வாறாக பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச்சங்கமும் சேர்ந்து எமது பாடசாலையின் அபிவிருத்திக்கு பேருதவி புரிந்து வருகின்றனர்.

எமது பாடசாலையின் பௌதீகவளத்தேவைகள் பல எமது கல்வி அமைச்சினால் இனங்காணப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. அதன் வரிசையில் எமது பாடசாலை நூலகம் புணரமைக்கப்பட்டது. வகுப்பறைகளுடன் கூடிய இருமாடிக் கட்டடமும், அதிபர் விடுதியும் அமைக்கப்பட்டு வருகிறது. இவற்றிற்கு மேலாக அண்மையில் சிறந்த பாடசாலைத்திட்டத்தின்கீழ் எமது பாடசாலைக்கு மேலும் பல கட்டிட புனரமைப்புக்களும், புதிய கட்டிட நிர்மாணிப்புக்களும் அமைய உள்ளது. இவற்றிற்குரிய போதிய நிலத்தேவை தற்போதைக்கு அவசியமாகின்றது. இதனை பழைய மாணவர்களும், பெற்றோர்களும் நிவர்த்தி செய்வதற்கு தம்மாலான உதவிகளை வழங்குவார்கள் என நம்புகின்றேன். தொடர்ந்தும் அவர்கள் சேவை கிடைக்குமிடத்து மாணவர் அடைவுமட்ட அதிகரிப்பு ஏற்படுவதுடன் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் மாகாண, தேசிய மட்ட ரீதியில் எமது மாணவர்கள் முன்னணி வகிப்பர் என்பது திடமாகும் என உறுதியளிக்கின்றேன்.

## H.O.P ஆசிரிய மட்டச் செயற்பாடுகள் - 2016

1. நாடக பயிற்சிப்பட்டறை
2. ஆசிரியர் வாண்மை விருத்தி
3. ஆசிரியரின் வகிபாகம்
4. உடல், உள நெருக்கீடுகளில் இருந்து விடுதலை பெறல்
5. நேர் வகுப்பறை முகாமைத்துவம்

## H.O.P மாணவர் மட்டச் செயற்பாடுகள் - 2016

1. சமயபாட தலயாத்திரை
2. தவக்கால செயற்றிட்டம்
3. உடற்பயிற்சி செயலமர்வு
4. விஞ்ஞானபாட செயலட்டை
5. கணிதபாட செயலட்டை
6. தமிழ்பாட செயலட்டை
7. தமிழ்மொழியும் இலக்கியமும் செயலட்டை
8. ஆங்கிலபாட செயலட்டை
9. தரம் 11 ஆங்கில பாட செயலட்டை

## எமது கல்லூரி வேண்டி நிற்கும் இன்றைய தேவைகள்

பாடசாலையின் துரிதமான வளர்ச்சிக்கு வளங்கள் மிகவும் அவசியம். வடமராட்சியில் முன்னணிப் பாடசாலையாக திகழும் எமது பாடசாலையில் சில பற்றாக்குறைகளும் காணப்படுகின்றன. அவை யாவும் எதிர்காலத்தில் நிறைவு செய்யப்பட வேண்டும்.

1. வகுப்பறைகளுடன் கூடிய பொதுநோக்கு மண்டபம்
2. மனையியல் ஆய்வு கூடம்
3. சிற்றுண்டிச்சாலையும் கேட்போர்கூடமும்
4. விளையாட்டு மைதான விஸ்தரிப்பு

# இணைப்பாட விதான செயற்பாடுகள் - 2016

## சைவசமயப்போட்டிகள்

| நிகழ்ச்சி | தரம் | போட்டியாளர்பெயர் | வலயம் |
|---|---|---|---|
| கோலம் போடுதல் | 6,7 | ஜீவராஜ். விதுசா | 3ம் இடம் |
| | 8,9 | பாலச்சந்திரன். பானுஜா | 3ம் இடம் |
| மாலை கட்டுதல் (கழுத்து மாலை) | 6,7 | சதீஸ்குமார். கம்சா | 3ம் இடம் |
| மாலை (ஆண்டாள் மாலை) | 8,9 | சிவபாலன். அபிராமி | 1ம் இடம் |
| மாலை (நாகசடை) | 10,11 | பு. தன்சிகா | 4ம் இடம் |
| கந்த புராண படலம் | 11 | ந. மிதுனா<br>கெ. வினித்தா | 1ம் இடம் |
| புராண படலம் (பெரிய புராணம்) | 10 | மு. சரணியா<br>செ. கம்சலா | 1ம் இடம் |
| கதாப்பிரசங்கம் | 10,11 | கெங்காதரன். வினித்தா | 1ம் இடம் |
| திருக்குறள் | 8,9 | நாகேஸ்வரன். விபுகா | 1ம் இடம் |
| திருக்குறள் | 12, 13 | பா. நிலானி | 3ம் இடம் |
| பண்ணிசை (பஞ்சதோத்திரம்) | 7 | வசந்தராஜ். தரணிகா | 1ம் இடம் |
| பண்ணிசை (பஞ்சதோத்திரம்) | 10 | செல்வயழகன் .கம்சலா | 1ம் இடம் |

## சமூகவிஞ்ஞானப்போட்டி– 2016

| தொடர் இல | வகுப்பு | பெயர் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|
| 1 | 12 | அருளானந்தம் மதுஜா | 1ம் இடம் | 3ம் இடம் |
| 2 | 12 | பாலசுப்பிரமணியம் நிலானி | 2ம் இடம் | ….. |
| 3 | 9 | செல்வலிங்கம் தக்ஷனா | 3ம் இடம் | ….. |

## வணிகப்போட்டி– 2016

| தொடர் இல | தரம் | போட்டியின்பெயர் | பிரிவு | போட்டியாளர்பெயர் | வலயம் |
|---|---|---|---|---|---|
| 1 | 12 | குறுவினா | III | த.ரம்மியா | 2ம் இடம் |
| 2 | 11 | கட்டுரை | II | ந.லக்சிகா | 2ம் இடம் |
| 3 | 12 | கட்டுரை | III | நி.நிகல்யா | 1ம் இடம் |
| 4 | 11 | பேச்சு | II | ந.மிதுனா | 3ம் இடம் |

# தமிழ்த்தினப் போட்டிகள் - 2016

| பிரிவு | போட்டியின் பெயர் | மாணவர் பெயர் | கோட்டம் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|
| 4 | கட்டுரை வரைதல் | வாமதேவன் ஜெயமிதிலா | 3 | 1 | பங்குபற்றியமை |
| 2 | வாசிப்பு | திருச்செல்வம் சானுஜா | 1 | … | |
| 4 | இலக்கணப்போட்டி | கம்சாயினி சிவசெந்திநாதன் | 2 | 3 | |
| 4 | குறுநாடக ஆக்கம் | சுலக்சனா சுகுமதிராஜன் | 2 | 3 | |
| 4 | சிறுகதை ஆக்கம் | ஜெயலட்சுமி முருகதாஸ் | 2 | … | |
| 4 | பாவோதல் | முரளிதரன் சரணியா | 1 | 2 | |
| 5 | இலக்கணப்போட்டி | ரவீந்திரன் ரசிதா | 1 | 2 | |
| 5 | குறுநாடக ஆக்கம் | ராஜ்குமார் ரனுஷா | 2 | … | |
| 5 | சிறுகதை ஆக்கம் | தவராசா தர்சினி | 1 | … | |
| 5 | இலக்கிய விமர்சனம் | சிவகுமார் சங்கவி | 2 | 2 | |
| தி.போ | விவாதம் | தவராசா தர்சினி<br>கருணாநிதி தர்சினி<br>விபுலானந்த அடிகள்.தாரகா | 1 | 2 | |
| தி.போ | தமிழறிவு வினாவிடை | கிருபானந்தன் கிருபாலினி<br>நாகராசா மோகனா<br>த.துவாரகா<br>ச.சாளினி<br>அ.மதுஜா | 1 | 1 | பங்குபற்றியமை |
| தி.போ | நாடகம் | ந.சிந்துஜா<br>மு.நிவேதினி<br>இ.வராகி<br>சு.சுலக்சனா<br>க.கதுஷா<br>கி.றொசாந்தினி<br>அ.பவதாரணி<br>ர.சிந்துஜா<br>ச.சஞ்சிகா<br>சி.லக்சிகா<br>பு.துவாரகா<br>சு.ரனுஷா<br>பி.தீபிகா<br>சி.சங்கவி | … | 1 | 3 |
| 2 | நடனம் தனி | து.துஷாந்தினி | 2 | 3 | |
| 3 | நடனம் தனி | செ.சாமந்தி | 2 | 2 | |
| குழு I | நடனம் குழு | ர.சௌமியா<br>அ.மிதுஷாயினி<br>ஜீ.விதுஷா<br>இ.ரேகா<br>து.துஷாந்தினி<br>செ.சாமந்தி<br>பு.விந்தியா<br>ந.மாதுளா<br>ந.மகிழினி<br>சி.அபிநயா | 3 | 3 | |
| 5 | இசை தனி | பி.தீபிகா | … | 3 | |
| 2 | இசை குழு | ந. கௌசலிகா<br>ஜெ. துர்க்கா<br>ஜெ. விஷ்ணுயா<br>ச. செந்துஜா<br>ர. கீர்த்தனா<br>இ. வின்சனா<br>செ. ஹம்சலா<br>றா. மீகுஷா<br>ச. வைண்ணவி<br>து. கஜானி | … | 3 | |

## கணிதபுதிர்போட்டி– 2016

| தொடர் இல | தரம் | போட்டியின்பெயர் | போட்டியாளர்பெயர் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|
| 1 | 7 | கணித புதிர்போட்டி | கணேசராசா அனுராஜி | 1 | பங்குபற்றியமை |
| 2 | 8 | கணித புதிர்போட்டி | தேவபாலன் லக்ஷாயினி | 2 | … |
| 3 | 7 | கணித புதிர்போட்டி | வசந்தகுமார் அபிசா | 2 | பங்குபற்றியமை |
| 4 | 8 | கணித புதிர்போட்டி | நின்மதிராஜா நிருபா | 2 | பங்குபற்றியமை |
| 5 | 10 | கணித புதிர்போட்டி | வேணுகோபாலவாணிதாசன் யுவஸ்திகா | 3 | … |
| 6 | 11 | கணித புதிர்போட்டி | வேணுகோபாலவாணிதாசன் ஜதிஸ்வர்யா | 3 | …. |

## ஒலிம்பியாட் போட்டி - 2016

| தொடர் இல | தரம் | போட்டியின்பெயர் | போட்டியாளர் பெயர் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|
| 1 | 6 | ஒலிம்பியாட் போட்டி | சிவனேசன் மதுஷாயினி | 25 பேரில் ஒருவர் | பங்குபற்றியமை |

## விஞ்ஞான வினாடிவினாப் போட்டி -2016

| தொ. இல | தரம் | போட்டி | பெயர் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|
| 1 | 11 | வினாடிவினாப்போட்டி | சிவசெந்திநாதன் கம்சாயினி | 1 | பங்குபற்றியமை |
| 2 | 11 | வினாடிவினாப்போட்டி | நடராஜப்பெருமான் லக்ஷிகா | 2 | பங்குபற்றியமை |

## English Day Competition – 2016 (Divisional, Zonal Level)

| Event | Name | Class | Divisional | Zonal |
|---|---|---|---|---|
| Copy Writing | Nesalingam Kiruja | 7 | 3 | |
| | Sathasivan Ahalya | 8 | 2 | |
| | Yogarasa Vithusha | 9 | 3 | |
| | Ninmathirasa Nikalya | 13 | 2 | 3 |
| Cursive Writing | Karunanithy Tharsini | 12 | 2 | 3 |
| | Pulenthiran Kajaginy | 13 | 1 | 3 |
| | Sarweswaran Thivisha | 13 | 2 | |
| Dictation | Sivanesan Mathusajini | 6 | 3 | |
| | Vasanthakumar Abisha | 7 | 3 | |
| | Ninmathirasa Niruba | 8 | 2 | |
| | Selvalingam Thaksana | 9 | 3 | |
| | Manivanan Sankavi | 10 | 1 | 2 |
| | Venugobalavanithasan Jatheeswarya | 11 | 2 | 2 |
| | Sivathasan Thurcca | 13 | 2 | 1 |
| Creative | Kandiah Sankavi | 9 | 3 | |
| | Venugobalavanithasan Yuwastikka | 10 | 1 | 1 |
| | Venugobalavanithasan Jatheeswarya | 11 | 3 | |
| | Ravikumar Rajintha | 12 | 2 | 2 |
| Recitation | Thavachelvam Sriranjika | 9 | 2 | |
| | Senthilrasa Hamsajini | 10 | 3 | |
| | Vamadevan Jeyamithila | 11 | 3 | |
| Reading | Suntharamoorthy Santhiya | 6 | 3 | |
| | Sureshlingam Sulaxsi | 9 | 2 | |
| | Balendran Kajalvili | 8 | 3 | |
| Solo | Senthilraja Hamsajini | 10 | 2 | 1 |
| | Sivasenthinathan Hamsajini | 11 | 3 | |
| Story Telling | Satheeskumar Kamsa | 7 | 3 | |
| Oratory | Ravikumar Rajintha | 12 | 1 | 1 |
| Role Play | Thayalakantah Thusikka | 7 | … | 2 |
| | Thuraisingam Thusanthini | | | |
| | Jeevaraj Vithusa | | | |
| | Satheeskumar Kamsa | | | |
| | Nanthakumar Thamanya | | | |
| | Sritharan Abinaja | 9 | … | 2 |
| | Sivasithamparam Sathvika | | | |
| | Nageswaran Vipuka | | | |
| | Thavachelvam Sriranjiga | | | |
| | Kandiah Shangavi | | | |
| | Krishnajothi Rukchika | | | |
| | Mahendrarajah Mathushika | | | |
| | Selvayalakan Kamsala | 10 | … | 3 |
| | Senthilrasa Hamsayini | | | |
| | Manivannan Sankavi | | | |
| | Nagarasa Sujanthini | | | |
| | Krishnarasa Najitha | | | |
| | Venugopalavanithasan Yuwasthika | | | |
| | Amalathas Deluxshana | | | |
| Role Play | Sevasenthinathan Kamsayini | 11 | … | 3 |
| | Balendran Sinthuja | | | |
| | Raveendran Sankavi | | | |
| | Sriramachandran Vithursini | | | |
| | Venugopalavanithasan Jathishwarya | | | |
| | Vamaderan Jeyamithila | | | |

## மனைப்பொருளியல் போட்டி– 2016

| தொடர் இல | போட்டியின்பெயர் | போட்டியாளர்பெயர் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|
| 1 | மனையியல் அறிவை அளத்தல் | இரத்தினகுமார் வின்சனா | மாகாணமட்ட தெரிவு 9 ல் ஒருவர் | பங்குபற்றியமை |
| 2 | | சுபாஸ்கரன் ஜெயமிலா | மாகாணமட்ட தெரிவு 9 ல் ஒருவர் | பங்குபற்றியமை |

## ஏனைய போட்டிகள்

### 150 வது பொலிஸ் தினம் போட்டிகள் - 2016

| தொ.இல | தரம் | போட்டி | பெயர் | பிரதேசம் |
|---|---|---|---|---|
| 1 | 6 | சித்திரம் | சிவனேசன் மதுஷாயினி | 1ம் இடம் |
| 2 | 6 | கட்டுரை | துஸ்யந்தசர்மா கம்சிகா | 2ம் இடம் |
| 3 | 6 | பாட்டு | கௌசிகன் நிருசா | 1ம் இடம் |

### சர்வதேச முதியோர் தினம் -2016

| பிரிவு | போட்டி | பெயர் | கோட்டம் |
|---|---|---|---|
| கீழ்ப் பிரிவு | கட்டுரை | சி. சஹானா | 3ம் இடம் |
| மத்திய பிரிவு | கட்டுரை | பா.ஜிந்துகா | 1ம் இடம் |
| மேல் பிரிவு | கட்டுரை | பா.நிலானி | 2ம் இடம் |
| மத்திய பிரிவு | கவிதை | தி.ஜவுதமி | 2ம் இடம் |
| மத்திய பிரிவு | பேச்சு | மு.சாரணியா | 2ம் இடம் |

### கூட்டுறவு அபிவிருத்தி போட்டிகள் -2016

| பிரிவு | தரம் | போட்டி | பெயர் | பிரதேசம் |
|---|---|---|---|---|
| 4 | 12 | சித்திரம் | கு.பிரசாதா | 3ம் இடம் |
| 6 | 6 | சித்திரம் | நி.டிலீசியா | 2ம் இடம் |

## தேசிய கலை இலக்கியப் போட்டி - 2016

| பிரிவு | போட்டி | பெயர் | பிரதேசம் |
|---|---|---|---|
| கனிஸ்ர பிரிவு | கவிதை | ச.மீரா | 1ம் இடம் |
| கனிஸ்ர பிரிவு | பாடல் | செ.கம்சலா | 2ம் இடம் |
| கனிஸ்ர பிரிவு | பாடல் | வ.தரணிகா | 3ம் இடம் |
| சிரேஸ்ர பிரிவு | கட்டுரை | ம.துஷாந்தினி | 1ம் இடம் |

## சர்வதேச நல்லொழுக்க தினப்போட்டி - 2016

| பிரிவு | போட்டி | பெயர் | பிரதேசம் |
|---|---|---|---|
| மேற் பிரிவு | கட்டுரை | க.தர்சினி | 2ம் இடம் |
| | பேச்சு | ர.சிந்துஜா | 3ம் இடம் |
| | விவாதம் | கு.யதுசா | 1ம் இடம் |
| | | க.தர்சினி | |
| | | த.தர்சினி | |
| | மேடை நாடகம் | சு.சுலக்சனா | 1ம் இடம் |
| | | சி.லக்சிகா | |
| | | சு.றனுஷா | |
| | | ச.சஞ்சிகா | |
| | | யோ.சௌமியா | |
| | | க.துளக்சனா | |
| | | சி.அனோஜி | |
| | | ர.சிந்துயா | |
| | | ஜெ.சோபனா | |
| | | மா.சிந்துமதி | |
| | | ஜெ.நிலக்சனா | |

## நாடகப்போட்டி (கொழும்பு றோயல் கல்லூரி) – 2016

| போட்டி | பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| மேடை நாடகம் | சு.சுலக்சனா | 2ம் இடம் |
| | இ.வராகி | |
| | சி.லக்சிகா | |
| | பு.துவாரகா | |
| | சு.றனுஷா | |
| | ச.சஞ்சிகா | |
| | அ.பவதாரணி | |
| | க.கதுசா | |
| | மு.நிவேதினி | |
| | கி.றொசாந்தினி | |
| | ர.சிந்துயா | |
| | பி.தீபிகா | |
| | சி.சங்கவி | |

## பண்ணிசைப்போட்டி

| பிரிவு | போட்டி | பெயர் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|
| I | பண்ணிசை | வ. தரணிகா | 2ம் இடம் | .... |
| குழு I | பண்ணிசை | க.மேசிகா<br>கெ.நிருஜா<br>கெ.விதுரா<br>வ.தரணிகா<br>கே.ராகவி<br>பே.துஷ்யந்தி<br>ஜோ.கௌதமி<br>த.தேனுகா<br>இ.விஜிதா<br>ச. மீரா<br>பா.பானுஜா<br>ஸ்ரீ.சுரேக்கா | 2ம் இடம் | ..... |
| குழு II | பண்ணிசை | பி.தீபிகா<br>க.சங்கவி<br>கெ.வினித்தா<br>ச.செந்துஜா<br>ர.கீர்த்தனா<br>செ.கம்சலா<br>அ.ஆர்த்திகா<br>து.கஜானி<br>இ.வின்சனா<br>ரா.மீருஷா | 1ம் இடம் | 2ம் இடம் |

## மெய்வல்லுனர்போட்டிகள் -2016

### பெருவிளையாட்டுக்கள்

| நிகழ்ச்சி | வயதுப்பிரிவு | வலயமட்டம் | மாகாணமட்டம் |
|---|---|---|---|
| கபடி | 19 | 3ம் இடம் | |
| உடற்பயிற்சி | 19 | 1ம் இடம் | 4ம் இடம் |
| மேசைப்பந்து | 15 | 4ம் இடம் | |
| | 19 | 3ம் இடம் | பங்குபற்றியமை |
| சதுரங்கம் | 15 | 4ம் இடம் | |
| | 19 | 4ம் இடம் | |
| வலைப்பந்து | 15 | 2ம் இடம் | 3ம் இடம் |
| | 17 | 2ம் இடம் | |
| | 19 | 2ம் இடம் | |

## மெய்வல்லுனர் போட்டிகள் -2016

| பெயர் | வயதுப் பிரிவு | நிகழ்ச்சி | வலயமட்டம் | மாகாணமட்டம் | தேசியமட்டம் |
|---|---|---|---|---|---|
| S. மீருஷா | 17 | தட்டு | 2ம் இடம் | 4ம் இடம் | |
| B. யதுகிரி | 17 | உயரம் | 2ம் இடம் | …. | |
| R. ஜெனோஷா | 15 | தட்டு | 1ம் இடம் | 1ம் இடம் | பங்குபற்றியமை |
| B. தீபராணி | 19 | தட்டு | 2ம் இடம் | 3ம் இடம் | பங்குபற்றியமை |
| | | ஈட்டி | 3ம் இடம் | ….. | |
| P. பிரதீஷா | 17 | 800M | 3ம் இடம் | | |
| | | 400M | 2ம் இடம் | | |

## கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரால் வழங்கப்படும் ஞாபகார்த்தப்பரிசில்கள்

1) திருமதி செல்லம்மா குமாரசாமி ஞாபகார்த்தப்பரிசு ரூபா 3000 பெறுபவர் - செல்வி சிறிதரன் கீர்த்தனா -(கணிதப்பிரிவு) வழங்குபவர் - செல்வி சோபனா பாலச்சந்திரன் - ப.மா.ச.கொ
2) Dr.ஸ்ரீபத்மநாதன் ஞாபகார்த்தப்பரிசு ரூபா 3000 பெறுபவர் - செல்வி உமாசங்கர் சகானா-(உயிரியல் பிரிவு) – வழங்குபவர் - திருமதி. ஜமுனா கணேசலிங்கம் - ப.மா.ச.கொ
3) Proff Sooriyakumarn ஞாபகார்த்தப்பரிசு ரூபா 3000 பெறுபவர் - செல்வி ஜெயவீரசிங்கம் சரண்யா (வணிகப்பிரிவு) - வழங்குபவர் - அமரர், திருமதி. வள்ளி சூரியகுமாரன் - ப.மா.ச.கொ
4) Proff Sooriyakumarn ஞாபகார்த்தப்பரிசு ரூபா 3000 பெறுபவர்- செல்வி தவராசா தர்சினி (கலைப்பிரிவு) – வழங்குபவர் - திருமதி. வள்ளி சூரியகுமாரன் - ப.மா.ச.கொ
5) Mrs.V.ராதாகிருஸ்ணன் ஞாபகார்த்தப்பரிசு ரூபா 1000 பெறுபவர் - செல்வி உமாசங்கர் சகானா (இரசாயனவியல்) வழங்குபவர் - ப.மா.ச.கொ
6) Mrs.P. தங்கராஜ் ஞாபகார்த்தப்பரிசு ரூபா 1000 பெறுபவர் - செல்வி உமாசங்கர் சகானா (உயிரியல்) வழங்குபவர் - ப.மா.ச.கொ
7) Mrs.G.பெருமாள்பிள்ளை ஞாபகார்த்தப்பரிசு ரூபா 1000 பெறுபவர் - செல்வி சிறிதரன் கீர்த்தனா (இணைந்த கணிதம்) வழங்குபவர் - ப.மா.ச.கொ
8) Miss.K.சரவணமுத்து ஞாபகார்த்தப்பரிசு தலா ரூபா 1000 பெறுபவர்கள் - செல்வி ஜெயவீரசிங்கம் சரண்யா, செல்வி. அலோசியஸ் நிரஞ்சிதா (வணிகக்கல்வி) - வழங்குபவர் - ப.மா.ச.கொ
9) Mr.A.சிவக்கொழுந்து ஞாபகார்த்தப்பரிசு ரூபா 1000 பெறுபவர் - செல்வி. ஜெயவீரசிங்கம் சரண்யா (கணக்கீடு) – வழங்குபவர் - ப.மா.ச.கொ
10) Mr.C.கிருஸ்ணபிள்ளை ஞாபகார்த்தப்பரிசு தலா ரூபா 1000 பெறுபவர்கள் - செல்வி. ஜெயவீரசிங்கம் சரண்யா, செல்வி. அலோசியஸ் நிரஞ்சிதா (பொருளியல்) - வழங்குபவர் - ப.மா.ச.கொ
11) Mr.S. சிவகுருநாதன் ஞாபகார்த்தப்பரிசு தலா ரூபா 1000 பெறுபவர் - செல்வி.T.தர்சினி, செல்வி.N.மோகனா, செல்வி.T.துவாரகா (இந்துநாகரிகம்) - வழங்குபவர் - ப.மா.ச.கொ
12) திருமதி. ஆறுமுகம் மகேஸ்வரன் ஞாபகார்த்தப்பரிசு தலா ரூபா 1000 பெறுபவர் - செல்வி.S. மிதுனா, செல்வி.R.ரசிதா, செல்வி.T.தயாளினி (வரலாறு) - வழங்குபவர் - ப.மா.ச.கொ
13) Dr.இராஜேந்திரம் ஞாபகார்த்தப்பரிசு தலா ரூபா 1000 பெறுபவர் - செல்வி. T.தர்சினி, செல்வி. K.காயத்திரி, செல்வி.T.தயாளினி (தமிழ்)- வழங்குபவர் - ப.மா.ச.கொ
14) Mr.தம்பையா ஞாபகார்த்தப்பரிசு ரூபா 1000 பெறுபவர் - செல்வி.ச.சாளினி (பரதநடனம்) - வழங்குபவர் - ப.மா.ச.கொ
15) பொதுசாதாரண பரீட்சைக்கான சிறந்த பெறுபேறுக்கான ரூபா 1000 பெறுபவர் செல்வி.பா.நர்மதா – வழங்குபவர் - ப.மா.ச.கொ
16) முன்னால் கணித உதவிக்கல்விப் பணிப்பாளரான S.தியாகராஜா அவர்களால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்புள்ளி பெற்று எமது கல்லூரியில் இணைந்து கொண்ட இரு மாணவருக்கு பணப்பரிசில் வழங்கப்படுகிறது.

- ❖ அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்கத்தினால் பல்கலைக்கழகம் செல்கின்ற 24 மாணவர்களுக்கு தலா ரூபா 1000 பரிசாக வழங்கப்படுகிறது.
- ❖ கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினால் பல்கலைக்கழகம் செல்கின்ற 04 மாணவர்களுக்கு தலா ரூபா 1000 பரிசாக வழங்கப்படுகிறது.
- ❖ திருமதி.பகவதி பாலசுப்பிரமணியம் ஞாபகார்த்தப் பரிசினை விசேட தேவையுள்ள மாணவி செல்வி ஜெயவீரசிங்கம் சரண்யா ரூபா 10000 பெறுகிறார் – வழங்குபவர் - திருமதி.சுகந்தி கிருபாகரன் - ப.மா.ச.கொ
- ❖ ஆங்கில பாடத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு தலா ரூபா 1000 பரிசாக வழங்கப்படுகிறது. (தரம் 08, தரம் 11) வழங்குபவர் - ப.மா.ச.கொ

- ❖ மணி ஞாபகார்த்தமாக கணித பாடத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற 4 மாணவர்களுக்கு தலா ரூபா 2000 வழங்கப்படுகிறது. (தரம் 06,07,08,09) - வழங்குபவர் - ப.மா.ச.கனடா
- ❖ திருமதி.வேலாயுதம் ஞாபகார்த்தமாக விளையாட்டுத்துறையில் சிறந்த வீராங்கனைக்கான ரூபா 5000 பரிசினை பெறுபவர் செல்வி.S.ஜெனோசா–வழங்குபவர் - திரு.ராதாகிருஸ்ணன் - ப.மா.ச.கனடா
- ❖ திருமதி.லோகநாயகி குமாரசாமி ஞாபகார்த்தமாக மாணவத்தலைவிக்கான ரூபா 1000 பரிசினை பெறுபவர் செல்வி.சங்கவி சிவகுமார் - வழங்குபவர் - ப.மா.ச.கொ

## <u>சிறந்த பெறுபேறு க.பொ.த (சா/த) ஞாபகார்த்தப்பரிசு</u>

1) கணேசலிங்கம் ஞாபகார்த்தமாக க.பொ.த சாதாரண தர பரீட்சையில் **9A** பெறுபேறு பெற்ற மூன்று மாணவிகள் தலா ரூபா 3000 பெறுகின்றனர். வழங்குபவர் -திருமதி.யமுனா. கணேசலிங்கம் - ப.மா.ச கொ
2) திரு.நடராஜசுந்தரம் ஞாபகார்த்தமாக க.பொ.த சாதாரண தர பரீட்சையில் **9A** பெற்ற இரு மாணவிகள் தலா ரூபா 3000 பெறுகின்றனர். வழங்குபவர் - ப.மா.ச கொ
3) க.பொ.த சாதாரண தர பரீட்சையில் **8A,B** பெற்ற இரு மாணவிகள் தலா ரூபா 2000 பெறுகின்றனர். - வழங்குபவர் - ப.மா.ச.க
4) க.பொ.த சாதாரண தர பரீட்சையில் **7A,2B** பெற்ற மூன்று மாணவிகள் தலா ரூபா 1000 பரிசாக வழங்கப்படுகிறது. - வழங்குபவர் - ப.மா.ச.க

## <u>கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்படும் சிறப்பு ஞாபகார்த்த பரிசு பெறுபவர்கள்</u>

1) Mr. மதியாபரணம் ஞாபகார்த்தமாக க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவில் சிறந்த பெறுபேறு பெற்ற நான்கு மாணவிகளுக்கு தலா 2000 பரிசு வழங்கப்படுகிறது. – வழங்குபவர் திருமதி.நளினி பகீரதன் - ப.மா.ச.க
2) Mr.மதியாபரணம் ஞாபகார்த்தமாக க.பொ.த (உ/த) கணிதப் பிரிவில் சிறந்த பெறுபேறு பெற்ற ஐந்து மாணவிகளுக்கு தலா 2000 பரிசு வழங்கப்படுகிறது. – வழங்குபவர் திருமதி.நளினி பகீரதன் - ப.மா.ச.க
3) க.பொ.த (உ/த) வர்த்தகப் பிரிவில் **2AB** பெறுபேறு பெற்ற ஒரு மாணவிகளுக்கு தலா 2000 பரிசு வழங்கப்படுகிறது. – வழங்குபவர் திருமதி.கல்யாணி சிவபாலன் - ப.மா.ச.கொ
4) க.பொ.த (உ/த) கலைப் பிரிவில் இரண்டாம் தடவையாக தோற்றி **3A** பெறுபேறு பெற்ற ஒரு மாணவிக்கும் முதல் தடவையாக தோற்றி **A, 2B** பெறுபேறு பெற்ற ஒரு மாணவிக்கும் தலா ரூபா 2000 வழங்கப்படுகிறது. – வழங்குபவர் ப.மா.ச.க
5) சௌபாக்கியவதி செல்லையா ஞாபகார்த்தமாக க.பொ.த (உ/த) உயிரியல் பிரிவில் மருத்துவத்துறைக்கு செல்கின்ற செல்வி.உமாசங்கர் சகானா ரூபா 10000 பரிசினைப் பெறுகின்றார். – வழங்குபவர் - கருணாதேவி கந்தையா – ப.மா.ச.கனடா

## பரிசளிப்பு விழாவிற்கு வழங்கப்படும் ஏனைய ஞாபகார்த்த பரிசில்கள்

1. சிறந்த பெறுபேறு பெற்று உயிரியல் பிரிவில் மருத்துவத்துறைக்கு தெரிவாகி பல்கலைக்கழகம் செல்லும் மாணவி செல்வி. உமாசங்கர் சகானா அவர்கள் பிரபல சமூகசேவையாளரும் வர்த்தகருமான திரு.ந.பாஸ்கரன் அவர்களால் இந்திராணி பாஸ்கரன் நிதியத்திலிலுந்து ரூபா 9189.99 வழங்கப்படும் பணப் பரிசினை பெறுகிறார்.
2. சிறந்த பெறுபேறு பெற்று பல்கலைக்கழகம் செல்லும் விசேட தேவையுடைய கலைப்பிரிவு மாணவி செல்வி.த.துவாரகா, எமது கல்லூரியின் பழைய மாணவியும் ஓய்வு பெற்ற பதிவாளருமான திருமதி.சரஸ்வதி தியாகராஜன் அவர்களால் ரூபா 9500.00 வழங்கப்படும் சிறப்புப்பரிசினை பெறுகிறார்.
3. மகேஸ்வரி நிதியத்திலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்ந்து புள்ளி பெற்று எமது கல்லூரியில் இணைந்துகொண்ட தரம் 6 இல் கல்வி கற்கும் 08 மாணவர்களுக்கு தலா ரூபா 2437.50 பணப் பரிசுகள் வழங்கப்படுகிறது.
4. செல்வி சௌபாக்கியவதி ஞாபகார்த்தப் பரிசு விசேட தேவையுடைய தரம் 06 ல் ஒரு மாணவிக்கு பரிசில் வழங்கப்படுகிறது.
5. பாமதி ஞாபகார்த்தப்பரிசு க.பொ.த உயர்தர முதல்நிலை பெறுபேறு பெற்ற மாணவிகள் பெறுகின்றனர்.
6. Dr.ஸ்ரீபத்மநாதன் ஞாபகார்த்தப்பரிசு க.பொ.த சாதாரணதர சிறந்த பெறுபேறு இரண்டாம் நிலை பெறுபேறு பெற்ற மாணவிகள் பெறுகின்றனர்.
7. புஸ்பம் சிவகுருநாதன் ஞாபகார்த்தப்பரிசு மாகாண, தேசியமட்ட தமிழ்த்தினப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு ரூ 13500 வழங்கப்படுகிறது. – வழங்குபவர் - Dr.நந்தினி நந்தகுமார்
8. வலயமட்ட தமிழ்மொழித்தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிக்கு சரஸ்வதி வைரவநாதன் நினைவாக சிதர்சினி சாந்தகுமார் அவர்களால் ரூ 19000 வழங்கப்படுகின்றது.
9. எமது கல்லூரியில் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் ஆங்கில இலக்கிய பாடத்திற்கு தோற்றி சித்திஎய்திய மூன்று மாணவர்களுக்கு திருமதி.பூபதி அருளானந்தம் ஞாபகார்த்தமாக, எமது கல்லூரியின் ஆசிரியர் திருமதி.மீரா கேதீஸ்வரா அவர்களால் தலா ரூபா 2000 வழங்கப்படுகின்றது.

## பரிசளிப்பு விழாவிற்கு அனுசரணை வழங்கியோர் விபரம்

1) சிவரூபன் – பிரபல வர்த்தகர் கூவில் – ஆசிரியர் மதிய உணவு

2) பழைய மாணவர் பருத்தித்துறை – விருந்தினர் மதிய உணவு

3) செல்வகிருஸ்ணன் – பிரபல வர்த்தகர் கூவில் – விருந்தினர், ஆசிரியர் சிற்றுண்டி

4) ஜெபநேசன் – சமூகசேவகர் – கல்லூரிவீதி – மாணவர் குளிர்பானம்

5) நிதர்சன் கிறீம் கவுஸ் – விருந்தினர், ஆசிரியர் சிற்றுண்டி

6) கிருஸ்ணா வெதுப்பகம் – மந்திகை – விருந்தினர், ஆசிரியர் சிற்றுண்டி

7) விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் – விளையாட்டுக்குழுவினருக்கான பரிசு

8) பிள்ளையார் ஸ்ரோர்ஸ் – தம்பசிட்டி – விளையாட்டுக்குழுவினருக்கான பரிசு

9) நியூவே சொப்பிங் – பருத்தித்துறை – விளையாட்டுக்குழுவினருக்கான பரிசு

10) தரன் நகை மாளிகை – நெல்லியடி – மாணவர் பரிசு

11) சிவம் புத்தகசாலை – நெல்லியடி – மாணவர் பரிசு

12) திரு.க.சுந்தரராஜன் – SDC – நினைவுப்பரிசு

13) வாணி நகை மாளிகை – பருத்தித்துறை – மாணவர் சிற்றுண்டி

14) சன் டியிற்றல் முகாமையாளர் - பாடசாலை முகப்புவாயில் பனர்

15) திரு.S.சிவகுமார் - ஒலிபெருக்கி அனுசரணை

16) தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை

17) வர்த்தக வங்கி நெல்லியடி

# கல்லூரிக்கீதம்

## பல்லவி

வட இந்து மங்கையர் கல்லூரி
வாழிய வாழி நீடூழி

## அனுபல்லவி

ஆழியிறைவன் அருள் நிதம் பாடி
பாழ்வினை யகலப் பரிவுடன் பயிலும் (வட)

## சரணம்

ஈழநன் நாடாம் எங்கள் பொன்னாட்டில்
திருவளர்ந் தோங்கிடும் பருத்தித்துறையாம்
தாழ்விலாத் தலத்தில் தவநெறிச் சங்கம்
தமிழ் மகள் மாண்புறத் தரணியி லருளிய (வட)

செந்தமிழ் முதலாஞ் சிறந்த நற்கலையும்
சிந்தையை யேற்றும் நற்திரு மறையும்
எந்தத்துறையிலும் தேர்ந்திடப் பயிற்சி
தந்திடும் தர்மம் தனதெனச் சாற்றும் (வட)

மங்கையர் பண்பும் இங்கு நாம் பயின்று
நங்குலம் தழைக்க நாடும் செழிக்கப்
பொங்கிடு மன்பும் மங்கிடா வீரமும்
எங்கணும் சேவைகள் செய்திட வளரும் (வட)

பன்னரும் பெருமைசேர் பரந்தநல் விண்ணே
பரிதியும் மதியு மின்றேல் இருட்புண்ணே
அன்பெனும் நிலவை பொழிபவள் பெண்ணே
இன்பக் கதிரொளி காட்டிடுங் கண்ணே
நன்மணி விளக்கே மாற்றுயர் பொன்னே
மன்னுயிர் சேவையை தன்னுயிரென்னும் (வட)